**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.66/2025 - PW-2**

| | |
|---|---|
| Name | திரு. சங்கர் |
| Husband/Father Name | கோவிந்தராஜ் |
| Village /Area | நெல்வாய் |
| Taluk | நெமிலி |
| Occupation | நிதி நிறுவன ஊழியர் |
| Age | 25 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 29.10.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். அசா.1 என்னுடைய நண்பர் ஆவார். இந்த வழக்கில் இறந்துபோன தமிழரசன் என்னுடைய நண்பர் ஆவார். கடந்த 16.01.2025 அன்று நானும் என்னுடைய நண்பர்கள் கோகுல், மணிகண்டன் ஆகிய மூவரும் பனப்பாக்கம் சென்று சாப்பிட்டு பெட்ரோல் வாங்கிக்கொண்டு வந்தோம். கோகுல் என்பவரை எங்கள் ஊரில் விட்டுவிட்டு திருமால்பூர் பாலத்தின் அருகே நானும் மணிகண்டனும் வந்தோம்.

அந்த நேரம் தமிழரசனும் விஜய கணபதியும் பாலத்தின் அருகே நின்று பேசிக்கொண்டிருந்தார்கள் நாங்களும் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தோம். அந்த நேரத்தில் ஆஜர் எதிரிகளான பிரேம்குமார் மற்றும் அவருடைய நண்பர்கள் அங்கு வந்து தமிழரசை பார்த்து நேற்று என்னையா மடக்கினாய் என்று ங்கோத்தா தெவிடியா பைய்யா என்று திட்டி காலால் எட்டி உதைத்தார்.

அப்போது விஜய கணபதி தடுத்த போது பிரேம்குமார் என்பவர் விஜய கணபதியின் கன்னத்தில் ஒரு குத்து குத்தினார். பிறகு நானும் மணியும் சென்று சண்டையை தடுத்தோம். அப்போது நான் கையில் வைத்திருந்த 1 லிட்டர் பாட்டில் பெட்ரோலை என்னிடம் இருந்து பிடிங்கி தமிழரசன் மீது பிரேம்குமார் ஊற்றினார் அந்த பெட்ரோல் விஜய கணபதியின் மீது சிதறி விழுந்தது. அப்போது பிரேம்குமாரின் நண்பர்கள் வெங்கடேசன், மணிகண்டன் என்பவர்கள் மாச்சான் அவர்கள் மீது தீவைத்து கொளுத்துடா என்று கூறினார்கள்.

பிறகு பிரேம்குமார் அவர் பாக்கெட்டில் வைத்திருந்த தீப்பெட்டியால் கொளுத்தி தமிழரசன் மீது போட்டார். தமிழரசன் பற்றி எரிந்துக்கொண்டிருக்கும் போது தமிழரசனை விஜய கணபதி கட்டி பிடிக்கும் போது அவருக்கும் தீப்பற்றிக்கொண்டது. நாங்கள் பதற்றத்தில் நானும் மணிகண்டனும் கூச்சல் போட்டோம். பாண்டியன் என்பவர் கிரிக்கெட் விளையாடும் இடத்தில் இருந்து சத்தம் கேட்டு வந்தார் அப்போது எனது அம்மா கோகிலாவும் ஓடி வந்தார். பாண்டியன் கட்டிக்கொண்டிருந்த லுங்கியை அவிழ்த்து தமிழசரன் மீது போர்த்தி தீயை அணைத்தார்.

என் அம்மா மேலே போட்டிருந்த துண்டை எடுத்து விஜய கணபதி மீது போர்த்தி தீயை அணைத்தார். பிறகு 108 ஆம்புலன்சிற்கு தகவல் கொடுத்து காயம் பட்ட தமிழசரனையும் விஜய கணபதியையும் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பிறகு என்னுடைய பைக்கை போலீசார் சென்று பார்த்த போது பைக்கின் டேங்கில் பெட்ரோல் காலியாக இருந்தது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பெட்ரோல்

வாட்டர் பாட்டில் இது அல்ல. நான் 1 லிட்டர் பாட்டிலில் தான் பெட்ரோல் வாங்கிவந்தேன்.

<u>1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் B.sc. Computer Science படித்துள்ளேன். மூவர் இருசக்கர வாகனத்தில் பயணிப்பது தவறு என்று எனக்கு தெரியும். நாங்கள் சட்டத்தை மீறி பயணித்தோம் என்றால் சரிதான். கோகுல், மணிகண்டன், எனது வீடு அருகருகே உள்ள என்று சொன்னால் சரியல்ல ஒரே ஊரில் உள்ளது. எனது வீட்டிற்கும் மணிகண்டன் வீட்டிற்கும் 300–400 மீட்டர் தொலைவு இருக்கும். கோகுல் வீடும் அதே தொலைவில் தான் இருக்கும்.

என்னுடைய இருச்சக்கர வாகனத்தை வீட்டில் தான் நிறுத்திவைத்திருந்தேன். பனப்பாக்கத்தில் இருந்து பெட்ரோல் வாங்கிக்கொண்டு சம்பவ இடம் தாண்டி நான் பெட்ரோல் பாட்டிலுடன் சென்றேன். நான் எனது வண்டிக்காக பெட்ரோலை வாங்கியிருந்தால் கோகுலை அவரது விட்டில் இறக்கி விட்ட சமயத்திலேயே என்னுடைய இருசக்கர வாகனத்தில் ஊற்றியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல, நான் பெட்ரோல் என்னுடைய வண்டிக்காக தான் வாங்கினேன் எனது வீடு கோகுல் வீட்டிற்கு பின்னால் உள்ளது அதற்குள் மணிகண்டன் என்னை ஜூஸ் சாப்பிட அழைத்ததால் சென்றுவிட்டேன்.

பெட்ரோல் பாட்டிலில் வாங்ககூடாது என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பாட்டிலில் பெட்ரோல் வாங்குவது சட்டப்படி குற்றம் என்று சொன்னால் நான் தவறான வழிக்கு பயன்படுதினால் தான் அது தவறு என்று சாட்சி கூறினார். ஆஜர் எதிரிகளை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அவர்கள் எந்த ஜாதியை சேர்ந்தவர்கள் என்றால் திருமால்பூர் காலனியை

சேர்ந்தவர்கள் அங்கு கிறிஸ்தவர்கள், ஆதிதிராவிடர்கள் வசித்து வருகிறார்கள்.

நான் திருமால்பூரில் ஜுஸ் குடிப்பதற்காக சென்றேன். சம்பவ இடமான வீர சீரக நதி பாலம் திருமால்பூருக்கும் நெல்வாய்க்கும் இடையில் உள்ளது. நான் மதியம் 03.00 முதல் 03.30 மணியளவில் பெட்ரோல் வாங்கினேன். நான் அங்கிருந்து பெட்ரோல் வாங்கிவிட்டு 1 மணி நேரம் சாப்பிட்டு விட்டு அதன் பின்புதான் எங்கள் ஊருக்கு சென்றோம் இந்த விவரத்தை போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். இறந்து போன தமிழரசன் மற்றும் விஜய கணபதி என்னுடைய நண்பர்கள் என்று சொன்னால் சரிதான்.

பிரேம்குமாருக்கும் தமிழரசனுக்கும் இடையே சம்பவம் முன் தினம் சண்டை நடைபெற்றது பற்றி தெரியுமா என்றால் தெரியும். தமிழரசனும் விஜயகணபதியும், பிரேம்குமார் தமிழரசனிடம் சண்டையிட்டதால் பிரேம் குமாரை ஏதாவது செய்யவேண்டும் என்று என்னிடம் கூறியிருந்தார்கள் என்றால் கூறவில்லை. நான் 100 ரூபாய்க்கு 1 லிட்டர் பெட்ரோல் வாங்கினேன். அது அரை லிட்டர் பாட்டிலில் பிடிக்குமா என்றால் பிடிக்காது.

திருமால்பூருக்கும் எங்கள் ஊருக்கும் இடைப்பட்ட தொலைவு 750 மீட்டர். எங்கள் ஊரில் கடைகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகே கடைகள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். 50 மீட்டர் தொலைவில் கடைகள் இருந்தது. நான் 100 ரூபாய்க்கு பெட்ரோல் வாங்கியதாக கூறப்படும் வாட்டர்கேன் நீதிமன்றத்தில் காட்டப்படுவது தானா என்றால் இல்லை மூடி மட்டும் புளூ நிறம் நான் பழைய தண்ணீர் பாட்டிலில் தான் பெட்ரோல் வாங்கி வந்தேன்.

சம்பவ இடத்திற்கு நான் செல்லும் போது மாலை 05.00 லிருந்து 05.15 மணியிருக்கும். நான் கோகுலை அவரது வீட்டில் இறக்கிவிடவில்லை என்றும் பிரேம் எங்கு வருகிறார் என்பதை பற்றி எங்களுக்கு தகவல் கொடுப்பதற்காக திருமால்பூர் காலனி அருகே இறக்கிவிட்டு வந்தேன் என்று சொன்னால் தவறு. பிரேம் இரு சக்கர வானத்தில் வருகிறார் என்ற விவரத்தை நாங்கள் கோகுல் மூலமாக தெரிந்துக்டோண்டோம் என்று சொன்னால் அது தவறு.

பிரேம் அந்த வழியாக இருசக்கர வானத்தில் வந்த போது ஏற்பட்ட பதட்டத்தில் நான் எனது கையில் வைத்திருந்த பெட்ரோலை பிரேமின் மீது ஊற்றிய போது அது தமிழரசன் மீதும் அவருக்கு அருகில் நின்றிருந்த விஜய கணபதியின் மீதும் பட்டது என்றும் நான் தான் தீக்குச்சியை பிரேமின் மீது பற்றி வைத்து போட்டதாக எண்ணி தமிழரசன் மீது விஜய கணபதியின் மீதும் பரவியது என்று சொன்னால் அது தவறு.

தமிழரசனுக்கு மார்பின் முன் பகுதியிலும் விஜய கணபதிக்கு முதுகிலும் தீப்பற்றிக் கொண்டது. ஒருவேலை தமிழரசனுக்கு ஏற்பட்ட தீக்காயத்தை விஜய கணபதி அணைக்க முற்பட்டிருந்தால் விஜய கணபதிக்கும் மார்பில் தான் தீக்காயம் ஏற்பட்டிருக்கும் என்று சொன்னால் பெட்ரோல் எங்கு பட்டதோ அங்கு தான் தீப்பற்றிக்கொண்டதாக சாட்சி கூறினார். பெட்ரோலை ஊற்றியது நான் தான் என்பதால் எனக்கு தான் தமிழரசன் மீதும் விஜய கணபதியின் மீது உடலின் எந்தெந்த பகுதியில் பெட்ரோல் கொட்டியது பற்றிய விவரம் தெரியும் என்று சொன்னால் தவறு.

வழக்கு சம்பந்தமாக போலீசார் சம்பவ தினத்தன்று இரவே என்னை விசாரித்து போது குற்றவாளிகள் யார் யார் என்று

கூறிவிட்டேன். போலீசார் என்னை சம்பவ தினத்தன்றும் சம்பவம் மறுதினமும் விசாரித்தார்கள். மறுநாள் என்னை போலீசார் மணிகண்டன் வீட்டில் காலை 06.30 மணியளவில் DSP என்னை விசாரித்தார்.

நான் பிரேம் குமாரை தீயிட்ட கொளுத்த திட்டமிட்டு நான் வாங்கிவைத்திருந்த பெட்ரோலை பிரேம் குமாரின் மீது ஊற்றுவதாக நினைத்து தமிழரன் மீதும் பிரேம் குமார் மீது ஊற்றிவிட்டேன் அதனால் ஏற்பட்ட பதற்றத்தில் தீக்குச்சியை பற்ற வைத்து வீசிய போது தமிழரசன் மீதும் விஜயகணபதியின் மீதும் பரவி தீக்காயங்கள் ஏற்பட்டது என்று சொன்னால் தவறு.

பிரேம்குமாரை கொல்வதற்கு சதிசெய்த விவரம் வெளியே தெரிந்தால் ஜாதி கலவரம் ஏற்பட்டுவிடும் என்பதால் மறுநாள் காலை DSP மணிகண்டன் வீட்டிற்கு வந்து என்னையும் அழைத்து அவர் கூறுவது போல் நானும் மணிகண்டனும் கூறவேண்டும் என்று வர்புறுத்தினார் என்று சொன்னால் முற்றிலும் தவறு.

அதனால் தான் எனது தாயார் அந்த இடத்திற்கு வரவேண்டிய அவசியமே இல்லை என்றும் இந்த வழக்கிற்கு வலு சேர்க்கும் விதமாக எனது தாயாரையும் ஒரு சாட்சியாக இந்த வழக்கில் சேர்த்துள்ளார்கள் என்று சொன்னால் தவறு. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமமும் இல்லை என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னார் சரியல்ல.

நான் சட்டத்தை மீறுபவர் என்று சொன்னால் தவறு. எனது வண்டியில் பெட்ரோல் இல்லை என்று கூறும் பட்டத்தில் எதற்காக கோகுலை அழைத்து சென்று வந்தேன் என்றால் சாப்பிடுவதற்காக அழைத்து சென்றேன். திருமால்பூரில் நடந்த விளையாட்டு போட்டியை

பார்ப்பதற்காக சுமார் 100 – 200 பேர் கூடியிருப்பார்கள்.

சம்பவம் நடந்த பிறகு அந்த இடத்தில் சுமார் 100 – 200 நபர்கள் கூடியிருப்பார்கள். நான் கூறுவது போல் 100 – 200 நபர்கள் சம்பவ இடத்திற்கு வந்திருந்தால் அவர்களும் இந்த வழக்கில் சாட்சியாக இருந்திருப்பார்கள் என்றும் பிரேம் குமாரை கொல்ல சதித்திட்டம் தமிழரசன் மீதும் பெட்ரோல் ஊற்றயதாலும் என்னை காப்பாற்றிக் கொள்வதற்காக தான் என் தாயாரையும் இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்று சொன்னால் அது தவறு.

**<u>எதிரிகள் 2 முதல் 5 தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் BSC computer Science படித்துள்ளேன். நான் திருமால்பூர் ஆண்கள் அரசினர் மேல் நிலைப்பள்ளியில் தான் படித்தேன். ஆஜர் எதிரி சதிஷ்குமார் என்னுடன் தான் 10 வகுப்பு வரை படித்தார் என்றால் சரிதான். ஆனால் வெவ்வேறு வகுப்புகளில் படித்தோம். அதனால் அவர் எனக்கு நண்பர் என்று சொன்னால் சரியல்ல. அவரை எனக்கு தெரியும்.

14 வயதிலிருந்து சதிஷ்சை எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். நான் பைனான்ஸ் நிறுவனத்தில் 2 அரை ஆண்டுகளாக வேலை செய்து வருகிறேன். நான் வேலை செய்யும் நிறுவனத்தில் திருமால்பூர், நெல்வாய் கண்டிகை, நெல்வாய், திருமால்பூர் காலனி ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் பைனான்ஸ் வாங்குவர்கள் என்று சொன்னால் சரிதான். அதனால் கொடுத்த பணத்தை வசூல் செய்ய மேற்படி பகுதிகளுக்கு நான் செல்வது வழக்கம் என்று சொன்னால் சரிதான்.

அவ்வாறு திருமால்பூர் காலனிக்கு செல்லும் போது மணிகண்டன், நவீன், பிரேம்குமார் ஆகியோர்களை எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். மேற்படி நபர்கள் மூவரும் திருமால்பூர்

காலனியில் தான் வசிக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். 16.01.2025 அன்று காணும் பொங்கல் பண்டிகை என்று சொன்னால் சரிதான்.

திருமால்பூர் மற்றும் திருமால்பூர் காலனியில் மாட்டுப்பொங்கல் மற்றும் காணும் பொங்கல் திருவிழாவை வெகு விமர்சையாக நடத்துவார்கள் என்று சொன்னால் சரிதான். மாட்டுப்பொங்கல் தினம் அன்று இரவு நான் நவீன் மற்றும் மணிகண்டனை திருமால்பூர் தோப்பில் பார்த்து பேசினேனா என்றால் இல்லை. நான் மணிகண்டனுடனும் தமிழரசனனுடைய பிரச்சனையை பேசி தீர்த்துக்கொள்ளலாம் என்றும் கூறினேனா என்றால் இல்லை.

என்னுடைய இரு சக்கரவாகத்தின் பதிவு எண். TN – 73 AZ 8479 Hero Splender – 2019 Model என்னுடைய வாகனத்தில் பெட்ரோல் இல்லை என்பதால் என்னுடைய வீட்டில் விட்டு தான் சென்றேன். எனது வீட்டிற்கும் மணிகண்டன் வீட்டிற்கும் இடைப்பட்ட தொலைவு 300 மீட்டர். எனது வண்டியில் பெட்ரோல் இல்லாததால் தான் மணிகண்டன் விட்டிற்கு சென்று வண்டியை எடுத்து சென்றோம் என்றால் சரிதான். அங்கிருந்து கோகுலின் வீடு 150 மீட்டர் தொலைவு இருக்கும்.

நான் தான் மணிகண்டன் மற்றும் கோகுல் ஆகியோர்களை அழைத்து கொண்டு சென்றேன் என்று சொன்னால் சரிதான். மணிகண்டனின் பல்சர் வண்டியில் சென்றோம். மாட்டுப்பொங்கல் மற்றும் காணும் பொங்கல் பண்டிகை தினம் என்பதால் எங்கள் வீட்டிலேயே அனைவரும் சமைத்து சாப்பிட்டோமா என்றால் சரிதான்.

வண்டியை எனது வீட்டில் விட்டுவிட்டு மணிகண்டன்

வீட்டிற்கு செல்லும் போது மதியம்  2.30 மணியிருக்கும். அதன் பிறகு கோகுலை வரச்சொல்லி மணிகண்டனின் இருசகக்ர வாகனத்தில் கிளம்பும் போது நேரம் 02.45 இருக்கும். பனப்பாக்கம் செல்ல வேண்டும் என்றால் நெல்வாய் கண்டிகை, ஜாகீர் தண்டலம், எஸ்.கொளத்தூர் வழியாகவும் செல்லலாம் என்று சொன்னால் சரிதான். அதே போல் நெல்வாயில் இருந்து பனப்பாக்கம் செல்ல வேண்டும் என்றால் திருமால்பூர் வழியாக தென்மாம்பாக்கம் சென்று செல்லலாம் என்று சொன்னால் சரிதான். இந்த இரண்டு வழிகளில் முதலில் சொன்ன வழிதான் எளிதாக இருக்கும்.  அவசரத்திற்கு செல்ல வேண்டும் என்றால் அந்த வழியாக சென்று விடலாம் என்று சொன்னால் சரிதான்.

நான் பெட்ரோல் வாங்கியதாக கூறம் பாட்டிலில் மூடியும் அதன் கீழே உள்ள வளையமும் ஒரே நிறத்தில் தான் இருக்க வேண்டும் என்று சொன்னால் நான் வாங்கி வந்த பாட்டிலில் அவ்வாறு ஒரே நிறத்தில் இல்லை.

HP பங்கில் தான் பாட்டிலை  தேடி நான்  பெட்ரோலை வாங்கினேன். திருமால்பூரில் இருந்து பனப்பாக்கம் செல்லும் போது முதலில் பாரத் பெட்ரோல் பங்க்,  அடுத்து இந்தியன் ஆயில் அதற்கு அடுத்து தான் HP பங்கு உள்ளது என்று சொன்னால் சரிதான்.  சம்பவ இடத்திற்கு அருகில் கடைகள் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

சம்பவ இடத்திற்கு எதிரே சிலைகள் உள்ளது என்றும் அதற்கு எதிரே பெட்ரோல் விற்கிறார்கள் என்று சொன்னால் சரிதான் நான் அங்கு வாங்கமாட்டேன். நான் 100 ரூபாய்க்கு தான் பெட்ரோலை வாங்கினேன்.  மேற்படி கடையில ரூபாய் 100 மற்றும 200 க்கு தான் பெட்ரோல் விற்பனை செய்துவருகிறார் என்று சொன்னால் சரிதான். அங்கு நான் வாங்குவதில்லை. நான் வாங்கிய பெட்ரோல் பங்கில்

எத்தனை பெட்ரோல் போடும் குழாய்கள் உள்ளது என்றால் 2 புறமும் இருந்தது 8 இருந்ததா 16 இருந்ததா என்று எனக்கு தெரியவில்லை. ஆகையால் நான் கூறுவது போல் 1 லிட்டர் வாட்டர் பாட்டிலில் பெட்ரோலை பிடிக்க முடியாது என்று சொன்னால் தவறு பிடிக்கலாம். அவ்வாறு பிடிக்கும் குழாய் H.P பங்கில் மத்தியில் இருந்த குழாயில் பிடித்தேன்.

நானும் மணிகண்டனும் பனப்பாக்கத்தில் உள்ள பனசை தாபா என்ற ஓட்டலில் சாப்பிட்டோம். நான் கூறுவது போல் அந்த ஓட்டல் அங்கு இல்லை என்றும் பனப்பாக்கத்தை தள்ளி உள்ளது என்று சொன்னால் சரிதான். அது பிள்ளைப்பாக்கம் செல்லும் வழியில் இடது புறத்தில் உள்ளது. நாங்கள் சாப்பிட்டுவிட்டு 04.30 முதல் 04.45 மணியளவில் புறப்பட்டு சென்றோம். அங்கிருந்து தென்மாம்பாக்கம் வழியாக திருமால்பூர் வந்து அங்கிருந்து நெல்வாய்க்கு சென்றோம். நாங்கள் நெல்வாய்க்கு சென்ற போது மாலை 05.00 மணியிருக்கும்.

சம்பவ நடந்ததாக கூறும் இடத்தை தாண்டி தான் எங்கள் ஊருக்கு சென்றோம் என்று சொன்னால் சரிதான். வண்டியை மணிகண்டன் தான் ஓட்டினார். மணிகண்டன் தான் கோகுலை அவருடைய வீட்டில் விட்டு விட்டு வந்தாரா என்றால் ஆமாம் நானும் உடன் சென்றேன்.

16 கி.மீ சென்று பிறகாவது நான் வாங்கிய பெட்ரோலை என்னுடைய இரு சக்கர வானத்தில் ஊற்றவோ அல்லது என் வீட்டிலோ வைக்காமல் நான் பெட்ரோல் கேனுடன் வந்ததற்கான காரணம் என்ன என்றால் ஜுஸ் சாப்பிட தான் நான் சென்றேன் வேறு எந்த சிறப்பு காரணமும் இல்லை. ஆகையால் போலீஸ் விசாரணையில் நான் என்னுடைய வண்டியில் பெட்ரோல் இல்லாததால்

மணிகண்டனினுடைய வண்டையை எடுத்து சென்றதகா கூறியுயள்ள விவரம் பொய் என்று சொன்னால் சரியல்ல.

நெல்வாயில் இருந்து திருமால்பூருக்கும் செல்லும் சாலையில் எப்போது இரவு 09.00 மணிவரை ஆள் நடமாட்டம் இருக்கும் என்று சொன்னால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறிய விவரத்தை தான் போலீஸ் விசாரணையிலும் கூறினேனா என்றால் ஆமாம். எனது தாயார் எனன் பொருள் வாங்குவதற்காக சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அனைத்து விடுமுறை நாட்களிலும் நான் படித்த ஆண்கள் அரசினர் மேல்நிலை பள்ளியின் கேட் பூட்டப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரிதான். மேற்படி பள்ளியினுடைய கேட் ஆனது சம்பவ தினத்தன்றும் அதன்று 3 நாட்களுக்கு முன்பும் பூட்டப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். மேற்படி பள்ளிக்கு ஒரே ஒரு கேட் தான் உள்ளது என்றும் மற்ற பகுதிகள் சுற்று சுவாரால் சூழப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

நாங்கள் கிரிக்கெட் விளையாடியதாக கூறிய கிரவுண்ட் மூடப்பட்டுள்ள பள்ளியின் உள் தான் உள்ளதா என்றால் ஆமாம். சம்பவம் நடைபெற்ற வீர சீரக நதியின பாலத்தின் ஓரம் உள்ள மதில் சுவர் வடக்கு தெற்காக உள்ளது. அதே போல் திருமால்பூரில் இருந்து நெமிலி செல்லும் சாலையும் வடக்கு தெற்காக தான் உள்ளது. பள்ளூரில் இருந்து பனப்பாக்கம் செல்லும் சாலை கிழக்கு மேற்காக உள்ளது.

சம்பவம் நடைபெற்றதாக கூறம் இடத்தல் இருந்து 50 அடி தொலைவில் தான் திருவிழா நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடைபெறும் போது அங்கிருந்து 50 அடி தொலைவில் சுமார் 100 பேர் இருந்திருப்பார்கள். போலீஸ்

விசாரணையில் எனது தாயார் சம்பவ சமயத்தில் வந்ததாக கூறினேனா என்றால் கூறினேன். பாண்டியன் என்பவர் தான் எனது தாயார் மேலிருந்த துண்டை எடுத்து விஜய கணபதியின் மீது போர்த்தி தீயை அணைத்தார் என்ற விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். 17.01.20252 அன்று DSP விசாரணையின் போது நான் அனைத்து விவரத்தையும் கூறினேன் என்றால் சரிதான்.

சம்பவம் நடந்ததாக கூறப்படும் பகுதியில் 2 நாட்களாக ஏறக்குறைய 200 – 300 நபர்கள் வழக்கு தாக்கல் செய்ய கோரி போரட்டம் செய்தார்கள் என்று சொன்னால் சரிதான் பிறகு நெமிலியிலும் செய்தார்கள். நான் செய்த தவறை மறைக்க வேண்டி போலீசாரை நிர்பந்தப்படுத்தி எதிரிகளின் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் தவறு. எதிரிகள் யாரும் இந்த குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றும் பல 100 நபர்கள் போராடியதன் காரணமாக தான் எதிரிகளின் மீது இந்த வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறு.

என்னுடைய கவனக்குறைவால் என்னால் ஏற்பட்ட தவறை மறைப்பதற்காக போராட்டம் நடத்தி எதிரிகள் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.29 19:27:56 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.